பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

02 10 2023 **MONDAY** 12 40 **PM**

வணக்கம் - ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள், முன்னாள் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி ஆகியோரின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

2. தமிழக முன்னாள் முதலமைச்சர் காமராஜரின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

3. விண்வெளி துறையில் தமிழக விஞ்ஞானிகளின் சாதனையால் நாடு பெருமை பெற்றிருப்பதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. மத்திய அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 22 இந்திய மொழிகளில் தேர்வுகள் நடத்தப்படும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

5. ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஸ்கேட்டிங் பிரிவில் பதக்கம் வென்ற இந்திய அணிக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர் ஆகியோர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

>>>><<<<<

தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுகிறது இதனையொட்டி, நாடுமுழுவதும் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

புதுதில்லியில் உள்ள மகாத்மா காந்தியடிகளின் நினைவிடத்தில் குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே மற்றும் மத்திய அமைச்சர்கள் மரியாதை செலுத்தினர்.

இந்நாளையொட்டி, குடியரசுத் தலைவர் திருமதி, திரௌபதி முர்மு விடுத்துள்ள செய்தியில் மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கைப் பாதை அகிம்சை கொள்கை ஆகியவை உலகிற்கு வாழ்ந்து காட்டும் நெறியை எடுத்துக்காட்டியிருப்பதாக கூறியுள்ளார்.

வன்முறை அல்லாத உலகை உருவாக்குவது மட்டுமல்லாமல், துப்புரவுப் பணிகள், மகளிர் மேம்பாடு, சுயசார்பு, விவசாயிகளின் உரிமைகள், தீண்டாமைக்கு எதிரான நடவடிக்கை, பாகுபாடற்ற சமுதாயம், எழுத்தறிவு கொள்கை போன்றவற்றுக்கு தமது வாழ்க்கையை அவர் அர்ப்பணித்ததாக திருமதி. முர்மு புகழாரம் சூட்டியுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் விடுத்துள்ள செய்தியில், சுதந்திர போராட்டத்தில் மகாத்மா காந்தியடிகள் ஆற்றிய பங்கு இன்றியமையாதது என்று கூறியுள்ளார்.

விடுதலை, சமத்துவம், சமச்சீர் இன்மையை போக்குதல் போன்ற கொள்கைகளில் அவர் உறுதியாக நின்றதாக திரு. ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், மனித குலத்திற்கே வழிகாட்டும் நெறியை மகாத்மா காந்தி அறிமுகப்படுத்தியதாக கூறியுள்ளார்.

மனிதர்கள் அனைவரும் ஒற்றுமையுடனும், மனித நேயத்துடனும் வாழ வேண்டும் என்று அவர் விரும்பியதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

மகாத்மா காந்தியடிகளின் சிந்தனைகள் ஒவ்வொரு இளைஞருக்கும் ஊக்கமளிப்பதாக உள்ளது என்று திரு. நரேந்திரமோடி குறிப்பிட்டுள்ளார்.

தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, சென்னையில் உள்ள காதிபவனில் காந்தியடிகளின் பிறந்தநாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

சென்னை, எழும்பூரில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் ஆளுநர் திரு. ஆர்.என். ரவி, முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் ஆகியோர், காந்தியடிகளின் உருவச்சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

மாநில அமைச்சர்கள் திரு. ராஜ கண்ணப்பன், திரு. சேகர்பாபு ஆகியோர் சென்னை குறளகத்தில் தமிழ்நாடு கதர்கிராம தொழில் வாரியம் சார்பில் கொலு பொம்மை கண்காட்சி மற்றும் கதர் சிறப்பு விற்பனையை இன்று தொடங்கி வைத்தனர்.

காந்தியடிகளின் கனவான இந்தியாவின் கிராமங்களை வலுப்படுத்துதல் என்ற நோக்கில் தமிழகத்தில் உள்ள கிராமங்களில் இன்று கிராமசபைக் கூட்டம் நடைபெறுகிறது.

காந்தியடிகளின் பிறந்தநாளை ஒட்டி புதுதில்லியில் உள்ள ஆகாஷவாணி தலைமையகத்தில் சிறப்பு தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

செய்திப்பிரிவின் முதன்மை தலைமை இயக்குநர் டாக்டர் வசுதா குப்தா, ஆகாஷவாணி அலுவலக வளாகத்தில் உள்ள மகாத்மா காந்தியின் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினார்.

தலைமையகத்தில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு தூய்மைப்பணி உறுதிமொழியையை அவர் செய்து வைத்தார். அப்போது துப்புரவுப் பணியாளர்களை அவர் கௌரவித்தார்.

முன்னாள் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் பிறந்த நாளும் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனிடையே, புதுதில்லியில் உள்ள லால்பகதூர் சாஸ்திரியின் நினைவிடத்தில் குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர்.

பிரதமர் திரு.நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், லால்பகதூர் சாஸ்திரியின் வாழ்வு, எளிமையானதாகவும் அர்ப்பணிப்புடன் இருந்ததாகவும் கூறியுள்ளார்.

விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு அவர் ஆற்றிய அரும்பணிகள் இன்றும் பெருமையுடன் நினைவுகூரப்படுவதாக அவர் தெரிவித்தார்.

ஜெய் ஜவான் ஜெய் கிசான் என்ற கொள்கையின் அடிப்படையில் அவர் இயங்கியதாக பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழக முன்னாள் முதலமைச்சர் காமராஜரின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, சென்னையில் உள்ள அவரது நினைவிடத்தில் தமிழக அரசின் சார்பில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

காங்கிரஸ் கட்சியின் சார்பிலும் தமிழகத்தில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

>>>><<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, சத்திஷ்கர் மற்றும் தெலங்கானா மாநிலங்களுக்கு நாளை பயணம் மேற்கொள்கிறார்.

சத்திஷ்கரில் 26 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான நிறைவுற்ற பணிகளை பிரதமர் தொடங்கி வைத்தும், புதிய பணிகளுக்கு அடிக்கல்லும் நாட்டுகிறார்.

அம்மாநிலத்தில் உள்ள பஸ்டர் மாவட்டத்தில் புதிய எஃகு ஆலையை நாட்டுக்கு அவர் அர்ப்பணித்து வைக்கிறார்.

உயர் ரக எஃகு தயாரிக்கும் இந்த ஆலை, பசுமை தொழில்நுட்பத்தை முக்கியப்படுத்துவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

இந்த மாநிலத்தில் அந்தகார் முதல் தரோக்கி வரையிலான புதிய ரயில் பாதையையும், ஜப்தல்பூர் - டன்டேவாரா இடையேயான அகல ரயில் பாதை திட்டத்தையும் அவர் நாட்டுக்கு அர்ப்பணித்து வைக்கிறார்.

நாளை மாலை, தெலங்கானா மாநிலத்திற்கு பிரதமர் செல்கிறார்.

அங்கு நிஸாமாபாதில் 8 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார உள்கட்டமைப்பு இயக்கத்தின் கீழ், தெலங்கானா மாநிலம் முழுவதும் 20 மருத்துவ அவசர உதவி மையங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

>>>><<<<<

மத்திய அரசின் உடல் உறுப்புதான முகாம்களின் மூலம் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் உறுப்புகளை தானம் செய்ய முன்வந்துள்ளதாக மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இதற்கான முகாம், குஜராத் மாநிலம், காந்திநகரில் கடந்த மாதம் தொடங்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<<

மத்திய அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 22 இந்திய மொழிகளில் தேர்வுகள் நடத்தப்படும் என்று மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்திய மொழிகள் மாநாட்டில் பேசிய அவர், இதுவரை 13 மொழிகளில் மட்டுமே அரசுப் பணியாளர் தேர்வுகள் நடத்தப்பட்டதாக கூறினார்.

ஜேஈஈ, நீட் மற்றும் பல்கலைக் கழக மானிய தேர்வுகள் 12 மொழிகளில் நடத்தப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மத்திய அரசின் தற்போதைய நடவடிக்கை காரணமாக, 22 மொழிகளில் இளைஞர்கள் தேர்வுகளை எழுத முடியும் என்றும், இதனால் மண்டல மொழிகளுக்கு முக்கியத்துவம் கிடைத்திருப்பதாகவும் அவர் கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, மாநில மொழிகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<<

விண்வெளி துறையில் தமிழக விஞ்ஞானிகளின் சாதனையால் நாடு பெருமை பெற்றிருப்பதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற விழாவில், தமிழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளுக்கு பாராட்டு தெரிவித்ததுடன், தலா 25 லடசம் ரூபாய் பரிசுத் தொகையையும் அவர் வழங்கினார்.

விருது பெற்ற ஒன்பது விஞ்ஞானிகளில் 6 பேர், அரசு பள்ளி மற்றும் கல்லூரிகளில் படித்தவர்கள் என்றும், முதல் தலைமுறை பட்டதாரிகள் என்றும் அவர் பெருமிதம் தெரிவித்தார்.

இதில் இரண்டு பேர் பெண்கள் என்றும், மாணவ மாணவிகளுக்கு அவர்கள் முன்னோடிகளாக திகழ்வதாகவும் அவர் கூறினார்.

மாணவர்கள், பள்ளிப் பருவ காலத்தில் கல்வியில் கவனம் செலுத்தி வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற குறிக்கோளை கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்று முதலமைச்சர் கேட்டுக் கொண்டார்.

(சவுண்ட் பைட் - முதலமைச்சர் 40 செகண்ட்ஸ்)

>>>><<<<<

நாட்டிலேயே முதல்முறையாக சூரியமின்சக்தி இயக்கத்தில் மிதிவண்டி பாதை ஹைதராபாதில் அமைக்கப்பட்டுள்ளது.

அம்மாநில நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. கே. தரக்க ராமாராவ் இதனை திறந்து வைத்தார்.

உலகிலேயே இரண்டாவதாக திறக்கப்பட்டுள்ள இந்த மிதிவண்டி பாதை முற்றிலும் மிதிவண்டி பயன்படுத்துவோருக்காக அமைக்கப்பட்டுள்ளது.

இரவு நேரங்களில் சூரியசக்தியில் இயங்கும் மின்விளக்குகள் இந்த பாதையில் பயன்படுத்தப்படுவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

16 ஆயிரம் சூரியசக்தி இயக்கிகள் இதில் உள்ளதாகவும், 16 மெகாவாட் மின்சக்தி இதனால் தயாரிக்கப்படுவதாகவும் எமது செய்தியாளர் மேலும் தெரிவிக்கிறார்.

>>>><<<<<

ஆசிய விளையாட்டுப் போட்டியில், ஸ்கேட்டிங் 3 ஆயிரம் மீட்டர் பிரிவில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் வெண்கலப் பதக்கம் வென்றன.

முதல்முறையாக ஸ்கேட்டிங் பிரிவில் இந்திய அணி பதக்கம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது

பதக்கம் வென்ற இந்திய அணிக்கு பிரதமர் திரு. நரேந்திரமோடி, மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர் ஆகியோர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

பிரதமர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், அர்ப்பணிப்புடன் செயல்பட்ட இந்திய அணிக்கு தமது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்வதாகவும், அவர்களது ஊக்கமும், உத்வேகமும் விளையாட்டு வீரர்களுக்கு உதாரணமாக திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்போட்டியின் பேட்மிண்டன் கலப்பு இரட்டையர் பிரவில் இந்தியாவின் கிருஷ்ணபிரசாத் – தனிஷா கிறாஸ்டோ இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>><<<<<

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில் கோவா இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

>>>>END<<<<<